**தலைப்பு 254 – பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் இலக்கம் 1.6.5(அ), 1.6.6(அ) மற்றும் (ஆ) என்ற பந்திகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த தேவைகளுக்கு புரம்பான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கட்டு நிதி சீராக்கல் கணக்கு சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இனங்காதிருந்தமை தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. | | |
| (அ) திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் ரூபா 356,759 தொகையான கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 816,630,475 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | கட்டுநிதி சீராக்கல் கணக்கில் குறிப்பிடப்பட்ட விடயங்களை சரியாக உள்ளடக்குவதற்கு தெளிவான அனுபவம் இல்லாதிருந்தமையினால் இந்த நிலைமை அறிக்கையிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஏனைய அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,240,913 தொகை குறைவாக சீராக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பதிலொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 60,859,133 தொகை மற்றும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் செலவிடப்பட்ட ரூபா 66,971,400 தொகை என்பன சீராக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சரியான பதிலொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஈ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண இணக்கக் கூற்றில் கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகள் முறையே ரூபா 63,469,606 தொகை மற்றும் 10,869,143 தொகை அதிகரித்து சீராக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சரியான சீராக்கங்கள் செய்யப்படாமை தொடர்பாக கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (உ) | வைப்புக்கள் மற்றும் ஏனைய பொது பேரேட்டு கணக்குகளின் கீழ் சீராக்கப்பட வேண்டிய மீதிகள் காணப்படாத போதிலும், கூட்டுமொத்தமாக ரூபா 73,974,077 வரவு மீதி மற்றும் ரூபா 5,743,635 செலவு மீதிகள் சீராக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | கட்டுநிதி தொடர்பாக சரியான அனுபவம் இல்லாமையினால் ஏற்பட்டுள்ள நிலைமையினை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் பதிவுசெய்தல் | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி | உயர் நீதிமன்ற வலயங்களில் |

| | | | |
|---|---|---|---|
| | வருதானம் மற்றும் நொத்தாரிசுகளுக்கு வருடாந்தம் உயர் நீதிமன்ற உறுதிப்படுத்தல் விநியோகிக்கும் கட்டண வருமானம் ரூபா 6,696,533,184 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,695,298,379 ஆக ரூபா 1,234,805 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. பிரதேச செயலகங்களினதும், உயர் நீதிமன்றங்களினதும் அறிக்கை பெறப்படாமையினால் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு முடியாதிருந்தது. | திறைசேரி புத்தகங்களுடன் இணங்கியிருக்க வேண்டியதுடன், வருமான அறிக்கைகளில் அந்த பெறுமதி உறுதிப்படுத்தப்பட வேண்டும். | சேகரிக்கப்படுகின்ற நொத்தாரிசு வருமானம் மற்றும் வருமானத்தின் மீள் கொடுப்பனவுகள் சரியாக சீராக்கப்படாமை, மாதாந்த வருமான அறிக்கைகளில் சகல வருமானங்களும் உரிய பிரகாரம் உள்ளடக்கப்படாமை போன்றவற்றின் காரணமாக திறைசேரி அச்சிடல் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்ட வருமானத்தை இணக்கம் செய்யமுடியாதிருந்தது. |
| (ஆ) | காணி ஆணையாளர் அலுவலகத்திலிருந்தும் வலய அலுவலகங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட ரூபா 8,016,600 தொகையான பதிவுசெய்தல் வருமானம், அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் உரித்து காப்புறுதி நிதியத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | வருமானங்களை சரியான பிரகாரம் இனங்கண்டு அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகள் ரூபா 68,775,004 ஆக இருந்த போதிலும், அது ரூபா 69,165,604 ஆக ரூபா 390,600 தொகை அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். | ஏனைய பெறுவனவுகளின் பின்னர் செலுத்தப்பட்ட ரூபா 390,600 தொகை சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட வேண்டிய கட்டுநிதி கணக்கில் ரூபா 356,759 தொகையான மீதி நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | உரிய பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். | கைத்தவறினால் அறிக்கையிடுவதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) | ஆதனங்கள், பொதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புக்களுடன் இணக்கம் செய்யும் போது 04 சொத்து விடயங்களின் பெறுமதி ரூபா 285,501,361 தொகை குறைவாகவும், 02 சொத்து விடயங்களின் பெறுமதி ரூபா 231,902,412 தொகை அதிகரித்தும் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய பெறுமதி திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புகளுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். | திறைசேரி புத்தகங்களில் உள்ளடக்கப்படாத தகவல்களை உள்ளடக்குவதற்கும் தகவல்களை சரி செய்து திறைசேரி அச்சிடல் குறிப்புக்களுடன் இணக்கும் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 03 ஏனைய அமைச்சுக்களின் நிதி ஏற்பாட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 128,861,425 தொகையான சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையளிக்கப்பட்டுள்ள சகல சொத்துக்களும் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் பொருத்தமற்றிருந்தது. |

### 1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளபடியான காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் முறையே ரூபா 1,789,225,604 மற்றும் ரூபா | காசு மற்றும் காசுக்கு சமமமானவைகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் | வரவு பதிவு பெறுவனவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் |

| | | |
|---|---|---|
| 1,789,125,604 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,615,061,807 மற்றும் ரூபா 1,614,737,209 தொகையாக காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக காசு உட்பாய்ச்சல் ரூபா 174,163,797 தொகை மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 174,388,395 தொகை குறைவாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உள்ளடக்கப்பட வேண்டும். | உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

**1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை.**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) நிலையான சொத்துப் பதிவேடு** | | |
| 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப் பிரமாணம் 502(2) இன் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்து பதிவேடு உரிய பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டுடன் பேணிச் செல்லப்படல் வேண்டும். | உரித்தினை பெற்ற ஆதனங்களை நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுள்ளது. |
| **(ஆ) எரிபொருள் பதிவேடு** | | |
| நிதி பிரமாணம் 1647(ஈ) இன் பிரகாரம் எரிபொருள் பதிவேடொன்று பேணப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் எரிபொருள் பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**1.6.6 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும், கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | ---------------- | ---------------------------------- |
| (அ) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்மைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழங்கப்பட்டுள்ள பதில் பிழையானதாகும். |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐய்யவினாக்களுக்கும் பதிலளிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தாமதமின்றி பதிலளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| (அ) | 1907 இன் 1 ஆம் இலக்க நொத்தாரிசு கட்டளைச் சட்டம் | | | |
| (i) | 27(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் 1951 ஏப்ரல் 27 ஆம் திகதிய 10/240 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரம் | வருடாந்த நொத்தாரிசு பெயர் பட்டியல் 2016, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பகிரங்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2014, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 10 மாதங்கள் முதல் 01 வருடம் வரையிலான தாமதத்தின் பின்னர் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம் சகல வருடங்களிலும் மே 01 ஆம் திகதி நொத்தாரிசு பெயர்ப் பட்டியல் வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக நொத்தாரிசு பெயர்ப் பட்டியல் நாளது வரையாக்கப்படுகின்றது. |
| (ii) | 18(3) ஆம் பிரிவு | நீதிமன்றங்களின் செயலாளர்களினால் நொத்தாரிசு பெயர்ப் பட்டியல் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக வருடாந்தம் சான்றிதழ் பெறமுடியாதிருந்த உரித்துறுதிகள் எழுதி உறுதிப்படுத்திய நொத்தாரிசுகள் தொடர்பாக நற்சான்று அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் கொழும்பு காணி பதிவாளர் அலுவலகத்தில் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அனுமதிப் பத்திரம் பெறாதிருந்த 1,589 நொத்தாரிசுகள் தொடர்பாகவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் நொத்தாரிசு பெயர்ப் பட்டியலை நாளது வரையாக்கி அனுமதிப் பத்திரம் பெறாத நொத்தாரிசுகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உயர் நீதிமன்றங்களின் அரையாண்டு அறிக்கை குறித்த பிரகாரம் கிடைக்காதிருந்தமை. |
| (iii) | 13 ஆவது | 03 காணி பதிவாளர் அலுவலகங்களில் | ஏற்பாடுகளின் | கொழும்பு உயர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் 30 ஆவது பிரிவுகள் மற்றும் 2015 இன் 12 ஆம் இலக்க தண்டப்பண அதிகரித்தல் சட்டம் | 2018 ஆம் ஆண்டின் போது அனுமதிப் பத்திரம் புதுப்பிக்காத 53 நொத்தாரிசுகளினால் 4,018 உரித்துறுதிகள் எழுதப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்றத்தில் மாத்திரம் 2018 ஆம் ஆண்டில் பெயர்ப் பட்டியல் பெறப்பட்டிருந்ததுடன் ஏனைய உயர் நீதிமன்றங்களில் இருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iv) | 26(ஆ) பிரிவு | 03 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆகஸ்ட் வரை 467 நொத்தாரிசுகளினால் 1,988 வெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்தமையினால் உரித்துறுதி சான்றுறுதிப்படுத்தப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம் வெற்று அறிக்கை பெறப்பட வேண்டும். | நொத்தாரிசுகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (v) | நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 31(6), (26) ஆம் பிரிவுகள் மற்றும் ஆவணங்களை பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தின் 4(1), (2) ஆம் பிரிவுகள் | 04 காணி பதிவாளர் அலுவலகங்களில் 2015 முதல் 2019 ஆகஸ்ட் வரை 532 நொத்தாரிசுகளினால் 12,867 இரண்டாம் பிரதி உரித்துறுதிகள் கையளிக்கப்படாதிருந்த போதும், அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரித்துறுதிகளின் இரண்டாம் பிரதியை கையளிக்குமாறு அறிவிப்பதற்கும், சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (vi) | 32, 41(1)(அ) மற்றும் (ஆ) பிரிவுகள். | 03 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் 2000 – 2018 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான காலத்தில் மரணமடைந்த 30 நொத்தாரிசுகளின் பொறுப்பில் காணப்பட்ட பதிவேடுகள் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரைகளை பெறுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் இவற்றை கையளிக்காத பொறுப்பாளர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவிஸ்ஸாவெல்ல அலுவலகத்தில் ததகவல்கள் காணப்படாதிருந்ததுடன் ஏனைய அலுவலகங்களில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (vii) | 35 ஆம் பிரிவு | 04 காணிப் பதிவாளர் அலுவலங்களின் 311 நொத்தாரிசுகளுக்கு 2002 ஆம் ஆண்டு முதல் 2019 யூலை வரையான காலத்தில் ரூபா 4 முதல் ரூபா 5,000 | ஏற்பாடுகளின் பிரகாரம் சமரச தீர்வு பணத்தை அறவிடுவதற்கு | பணத்தை அறவிடுவதற்காக வேலைத் திட்டமொன்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இற்கு இடையிலான வீச்சில் விதிக்கப்பட்டிருந்த கூட்டு மொத்தமான ரூபா 1,589,050 சமரச தீர்வு பணத்தை அறிவடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தயாரிக்கப்படுகின்றது. |
| (ஆ) | 1927 இன் 23 ஆம் இலக்க ஆவணங்களை பதிவுசெய்யும் கட்டளைச் சட்டம் | | | |
| (i) | ஆவணங்களை பதிவுசெய்யும் கட்டளைச் சட்டத்தின் V ஆம் அத்தியாயத்தின் 28(1) மற்றும் (2)(அ) ஆம் பிரிவுகள். | 04 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் 2001 – 2018 காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட போதும், மீள கையளிக்காத 3,042 காணி உரித்துறுதிகள் தொடர்பான பட்டியலை பேணிச் செல்வதற்கும் காணிப் பதிவாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் பூர்த்தியானதாக இல்லை. |
| (ii) | ஆவணங்களை பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பிரிவு | 04 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் 2001 இற்கும் 2019 இற்கும் இடையிலான காலத்தில் கையளிக்கப்பட்ட உரித்துறுதியின் 119,285 இரண்டாம் பிரதிகளை கோவைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிலத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டாம் பிரதிகளை கோவைகளில் கட்டி பாதுகாப்புடன் வைக்கப்பட வேண்டும். | பதவியணியினரின் பற்றாக்குறை காரணமாக கோவை செய்வதற்கு தாமதிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் நிதிப் பிரமாணம் 571 | ரூபா 1,118,400 பெறுமதியான காலாவதியான 05 வைப்புக்களை அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணை செய்து அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2009 யூன் 17 ஆம் திகதிய | பதிற்கடமை பதிவாளர் நாயகம் மற்றும் அவரின் சாரதியினால் கைவிரல் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் | களப் பரிசோதனைகளுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 09/2009(1) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | அடையாள இயந்திரத்திலோ அல்லது பதிவேட்டிலோ வருகை மற்றும் வெளிச் செல்லுகை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | செல்ல வேண்டி ஏற்படுகின்றமையினால் வரவு வெளிச் செல்லுகைகளை குறிப்பிடுவதற்கு முடியாதிருந்தது. |
| (உ) | 1970 இன் பதிவாளர் நாயக கைநூல் -உரித்துறுதி பதிவு செய்தல். | | | |
| (i) | 375(1) மற்றும் (2), 410 மற்றும் 411 ஆம் பிரிவுகள். | 02 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கிடைக்கப் பெற்ற 155,714 இரண்டாம் பிரதிகளை பரீட்சித்து நற்சான்றினை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டாம் பிரதிகளை பரீட்சித்து நொத்தாரிசு பரிசோதனைப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையினால் பணிகள் தாமதமடைந்திருந்தது. |
| (ii) | 440(2) ஆம் பிரிவு மற்றும் 2019 யூலை 23 ஆம் திகதிய 11/2019 ஆம் இலக்க பதிவாளர் நாயகத்தின் சுற்றறிக்கை. | 03 காணிப் பதிவாளர் அலுவலகங்களின் 304 நொத்தாரிசுகளுக்கு விதிக்கப்பட்ட நிலுவை மற்றும் தண்டப்பணம் ரூபா 4,075,921 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை மற்றும் தண்டப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (iii) | பதிவாளர் நாயக கைநூலின் 452 ஆம் பிரிவு | 05 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் 2012 - 2019 இற்கு இடையிலான காலப் பகுதியில் உரித்துறுதிகளில் இரண்டாம் பிரதி கையளிக்காத 09 நொத்தாரிசுகளுக்கு வழக்குத் தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் பூரணமானது அல்ல. |

**1.6.8 வரித் தேவைகளுக்கு இணங்காமை.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 இன் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிழற்பட பிரதி சேவையை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக செலுத்தப்பட்ட ரூபா 8,542,773 தொகை பெறுமதி சேர் வரி அறிக்கைக்குரிய பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுமதி சேர் வரி (வற்) மேவுகை செய்வதற்காக பணம் செலுத்தப்பட்டதன் பின்னர் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் கட்டுநிதி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கட்டுநிதி திட்டம் தயாரிக்கப்படும் என்பதை குறிப்பிட்டுக் கொள்கின்றோம். |
| (ஆ) 42 உத்தியோகத்தர்களுக்கு 42 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 2,618,490 தொகையான முற்பணம் 07 நாட்கள் முதல் 08 மாதங்கள் வரையான கால வீச்சில் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.2 வருமான முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதிவுசெய்யும் ஆரம்ப வருமானம் ரூபா 1,400,000,000 ஆக தயாரிக்கப்பட்ட ஆரம்ப மதிப்பீடு பொதுத் திறைசேரியினால் ரூபா 1,450,000,000 ஆக திருத்தப்பட்டிருந்தது. திணைக்களம் தயாரித்த மதிப்பீட்டை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட 17 சதவீதம் அதிகரித்து ரூபா 1,689,706,685 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | வருமானங்கள் சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | மதிப்பீடு தயாரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது விரைவாக சேவைகளை ஆரம்பித்தல் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்த முடியாதிருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் அனுமதிப் பத்திரத்தை விநியோகித்தல் மற்றும் அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்தல் கட்டணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டியமை தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன், நொத்தாரிசு கட்டண வருமானம் ரூபா 20 மில்லியன் ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 6,826,494 அதாவது, 34 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | -மேற்படி- | ஆரம்ப வருமானத்தை திருத்தாமை வருமானக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த வருமானம் ரூபா 24,813,876 ஆக இருந்த போதிலும், நிலுவை வருமானக் கூற்றின் | சரியாக அறிக்கைகளை பேணி நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு | மாகாண சபைகளுக்கு அறவிட வேண்டிய வருமானம் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் அந்த நிலுவை வருமானம் மாகாண சபைகளில் இருந்து |

| | | |
|---|---|---|
| பிரகாரம் அது ரூபா 62,411,624 ஆக இருந்தமை, பிரதான அலுவலகம் மற்றும் காணிப் பதிவாளர் அலுவலகங்களின் நிலுவை வருமானம் அறிக்கை என்பவற்றுக்கிடையே ரூபா 6,883,768 தொகையான வேறுபாடு காணப்பட்டமை மற்றும் ரூபா 1,373,919 செலுத்த வேண்டிய மீதியொன்று நிலுவை வருமானத்தில் ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிலுவை வருமானத்தின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்கு சுற்றறிக்கையொன்று விநியோகிக்கப்பட்டுள்ளது. |

## 2.3 செலவின முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு பிரயாணச் செலவின விடயத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 1,000,000 தொகையான ஆரம்ப நிதி ஏற்பாட்டில் ரூபா 700,000 தொகை நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் மாற்றப்பட்டதன் பின்னர் ரூபா 300,000 மொத்த தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது. | சரியாக திட்டமிடப்பட்ட வேலை திட்டங்களுக்கு மாத்திரமே நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு சுற்றுலா கிடைக்காமையின் காரணமாக நிதி சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 09 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 244,550,000 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் 13 சதவீதம் முதல் 69 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் ரூபா 35,493,970 தொகை மற்றும் 05 மூலதன செலவின விடயங்களில் ரூபா 53,600,000 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் 13 | சரியான முகாமைத்துவத்துடன் நடவடிக்கைகளை கையாண்டு பயன்படுத்துதல் வேண்டும். | திறைசேரி நிதி ஏற்பாடு வழங்குவதில் தாமதம் மற்றும் கட்டுநிதி போதியளவான பிரகாரம் கிடைக்கப்பெறாமை இந்த சேமிப்புக்களுக்கு காரணமாக இருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் முதல் 73.9 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் ரூபா 28,040,619 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக 20 செலவின விடயங்களுக்காக ரூபா 202,900,000 தொகை குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையில் செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அதிகரித்த செலவினங்களுக்காக மேலதிக நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தமை. |
| (ஈ) | மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 25 சதவீதம் சேமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 07 செலவின விடயங்களில் ரூபா 43,400,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் சேமிப்பு 5,083,107 தொகை அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 3 சதவீதம் முதல் 20 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் காணப்பட்டது. | 2019 ஏப்ரல் 08 ஆம் திகதிய 03/2019 ஆம் இலக்க மற்றும் 2019 செப்தெம்பர் 24 ஆம் திகதிய 5/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிறுத்தி வைத்தல் தொடர்பான திறைசேரியின் அறிவுறுத்தல் கிடைக்கப் பெறாமை. |

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடம் மாற்றலாகி சென்ற, மரணமடைந்த, ஓய்வு பெற்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட, சேவையிலிருந்து விலகிய, சேவையிலிருந்து விலக்கிய மற்றும் கேட்டு | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் பந்தியின் 4.6 மற்றும் 4.2.5 ஆம் பிரிவுகள் மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 118 | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| விலகிய 73 உத்தியோகத்தரிடமிருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,824,898 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை கடன் மீதி 03 மாதங்கள் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கால வீச்சிலிருந்து கொண்டுவரப்படுகின்றது. | ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிலுவை முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஆ) இணக்கக் கூற்றின் பிரகாரம் உள்ளபடியான செலவினம் ரூபா 85,001,250 ஆக இருந்த போதிலும், திறைசேரி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் அது ரூபா 87,219,942 ஆக இருந்தது. திணைக்கள புத்தகங்களின் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்பட்ட ரூபா 2,218,692 தொகை திறைசேரிக்கு அறிக்கையிடப்படாதிருந்தமை அதற்கான காரணமாகும். | திறைசேரி அச்சிடல் குறிப்புக்கள் சரி செய்யப்படல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.5 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் திறைசேரி அச்சிடல் குறிப்புகளின் பிரகாரம் ரூபா 4,052,020 தொகையான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 52,830,613 ஆக ரூபா 48,778,593 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். | கணக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்கும் வரை உரிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் காண்பிக்கப்படுவதுடன், அதன் பின்னரான கொடுப்பனவுகள் பொறுப்புக்கள் பதிப்வேட்டில் குறிப்பிடப்பட்டு கொடுப்பனவுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நிதிப் பிரமானம் 206(அ) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக 08 செலவின விடயங்களில் ரூபா 7,286,699 தொகையான சேமிப்பினை விஞ்சி ரூபா 10,531,218 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சேமிப்பை விஞ்சாமல் பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். | உரிய ஆண்டின் போது செலுத்துவதற்கு முடியாதிருந்த அத்தியவசிய செலவினங்கள் அடுத்த ஆண்டின் போது செலுத்துவதற்கு ஏற்பட்டமையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. |
| (இ) | 04 செலவின விடயங்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் ரூபா 15,528,246 தொகை பொறுப்புக்கள் பதிவேட்டிலும், 02 செலவின விடயங்களின் கீழ் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,725,938 தொகையான பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சகல பொறுப்புக்களும் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | பொறுப்புக்கள் பதிவேட்டிற்கும் நிதிக் கூற்றுக்களுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 திட்டமிடல்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.2 செயலாற்றல்**

-----------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிகளின் செயல் முன்னேற்றம் தொடர்பாக செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் இறுதியில் செயல் முன்னேற்றத்தை உள்ளடக்கி செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சிவில் பதிவு செய்தல் மற்றும் ஆவணங்களை பதிவு செய்தல் என்பன திணைக்களத்தின் பிரதான பணியாகும். எனினும், தற்போதைய சிக்கல் மிக்க பொருளாதார மற்றும் சமூக நிலைமை, அரசாங்க கொள்கைகள், தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டம், அரச வருமானங்களை உரியவாறு சேகரித்தல் போன்ற விடயங்களுக்கு இணங்கும் வகையில் பதிவு செய்தல் நடவடிக்கைகள் தொடர்பான சட்ட திருத்தங்களைச் செய்வதற்கு உரிய வேலைத்திட்டமொன்று திணைக்களத்தில் காணப்படாமையினால் பழைய சட்டம் மற்றும் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | பதிவு செய்தல் நடவடிக்கைகள் மற்றும் தொடர்பான சட்ட திருத்தங்களை திங்களைச் செய்தல் என்பவற்றிற்கு சரியான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | சட்ட உத்தியோகத்தர் ஒருவர் 2020 யூன் மாதம் சேர்க்கப்பட்டிருந்ததுடன் உரிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | e–Land Registry செயற்திட்டத்தின் மூலம் 09 கட்டங்கள் மற்றும் 51 நாட்கள் எடுக்கின்ற ஆதனங்களை பதிவு செய்யும் செயற்பாடுகள் 05 நாட்கள் மற்றும் 02 கட்டங்கள் வரை குறைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதன் மூலம் வணிகமயமாக்களை இலகுபடுத்தும் குறிகாட்டி (Ease of | உரிய பிரச்சினைகளை இனங்கண்டு e–Land Registry செயற்திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டு வணிக மயமாக்கலை இலகுபடுத்தும் குறிகாட்டியில் இலங்கையின் | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்காகவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| Doing Business Index) உப குறிகாட்டியான ஆதனங்களை பதிவு செய்யும் குறிகாட்டியை மேலே கட்டியெழுப்பி நாட்டின் பொருளாதார செயலாற்றல் மற்றும் முதலீட்டு சிக்கல்களை விட நல்ல முறையில் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் 20 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டத்திற்காக சரியான திட்டமிடப்பட்ட வேலைத் திட்டமொன்று காணப்படாமை, தொழில்நுட்ப அறிவுள்ள உத்தியோகத்தர்கள் காணப்படாமை, மென்பொருள் வழுக்களுடன் காணப்பட்டமை போன்ற காரணங்களினால் வெற்றிகரமாக அமுல்படுத்த முடியாதிருந்தது. மேலும், எஞ்சிய 25 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைமையை உயர்வடையச் செய்ய வேண்டும். | |

**3.3 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சாத்தியவள ஆய்வொன்றை செய்வதற்கும், பிரதான பெறுகைத் திட்டமொன்றில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது புகைப்பட பிரதி சேவைகளுக்காக ரூபா 67,796,624 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்த தொகையில் 5 சதவீதத்திற்கு | 2006 இன் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4 மற்றும் 5.4.8 வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | குறையாத செயலாற்றல் காப்பீடொன்று பெறப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 250,000 காப்பீடொன்று மாத்திரமே பெறப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2006 இன் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1, 4.2.2 மற்றும் 4.2.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை கால அட்டவணையொன்றும், விரிவான பெறுகைத் திட்டமொன்றும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக் கால அட்டவணை மற்றும் விபரமான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பெறுகைத் திட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 04 பெறுகை வகைகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 14,340,000 தொகையை ரூபா 11,233,333 இனால் அதிகரித்து செலவிடப்பட்டிருந்ததுடன் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 74,039,894 தொகையான 05 பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | தேவையின் பிரகாரம் பெறுகைத் திட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சொத்துக்களின் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் சொத்துக்களின் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் கொள்ளப்பட | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் திணைக்களத்தின் அலுவலகங்களில் காணப்படுகின்றமையால் பௌதீக பரிசோதனை செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | 2,224,707,985 தொகையான சொத்துக்களின் பெறுமதி பௌதீக ரீதியில் உறுதிப்படுத்தப்படவில்லை. | வேண்டும். | வேண்டியிருந்தது. |
| (ஆ) | திணைக்களத்திலிருந்தும் அமைச்சிலிருந்தும் 20 வாகனங்கள் கிடைத்திருந்தன. எவ்வாறாயினும் சாரதிகள் காணப்படாமை மற்றும் திணைக்களத்திற்கு கையேற்கப்படாமையின் காரணமாக வருமான அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்த அந்த வாகனங்கள் விளைவற்று காணப்பட்டது. | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் காணி உரித்துறுதி பதிவு செய்தல் ஒரு நாள் துரித சேவை வருடாந்த செயற்திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் காணிப் பதிவாளர் அலுவலகங்களில் அதன் ஆரம்ப விழா நடத்துவதற்காக ரூபா 2,609,750 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது. | சகல பணிகளும் திட்டமிடப்பட்டு மற்றும் சிக்கனமாக மேற்கொள்ளப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நொத்தாரிசு ஒருவருக்கு நாட்டின் எந்தவொரு இடத்திலும் அமைந்துள்ள காணியொன்றின் உரித்துறுதியை எழுதி உறுதிப்படுத்த முடியுமாக இருந்தமை அவதானிக்கப்படாதிருந்ததுடன், | நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நொத்தாரிசு செயற்பட வேண்டியது தமது அதிகாரப் பிரதேசத்தில் மாத்திரமாக இருந்ததுடன், தமது வதிவிட மாவட்டத்தில் காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு இரண்டாம் |

| | | | |
|---|---|---|---|
| | 2018 ஆம் ஆண்டின் போது அவிஸ்ஸாவெல்ல நீதிமன்ற வலயத்திற்கு புறம்பான வலயங்களில் பதிவுசெய்த 57 நொத்தாரிசுகளினால் எழுதப்பட்ட 113 காணி உரித்துறுதிகள் அந்த காணி அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | | பிரதி கையளிக்கப்பட வேண்டும். |
| (இ) | 04 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் 2016 – 2019 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலத்தில் பதிவுகள் நிராகரிக்கப்பட்ட 1,421 உரித்துறுதிகள் மற்றும் குறைபாடுகளின் காரணமாக பதிவு செய்யப்படாதிருந்த 6,895 உரித்துறுதிகள் தொடர்பாக நொத்தாரிசுகளுக்கு அறிவித்து உரிய செயற்பாடுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நொத்தாரிசுகளுக்கு அறிவித்து சகல நடவடிக்கைகளும் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | நொத்தாரிசுகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | போக்குவரத்து வசதிகள் உரித்தற்ற போக்குவரத்து பிரிவின் பொறுப்பான உத்தியோகத்தருக்கு கடமை நிலையத்திலிருந்து வீடு வரை போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், வாகனத்தின் சாரதி வாகனத்தை அனுமதியின்றி எடுத்துச் சென்றமை மற்றும் மதுபானங்களை அருகில் வைத்துக் கொள்வதற்கும், ஓட்டக் குறிப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்காமை தொடர்பாக உத்தியோகத்தரிடமிருந்து விடயங்களை விசாரணை செய்வதற்கு அமைச்சு விசாரணை அறிக்கை மூலம் பரிந்துரை செய்யப்பட்டிருக்கும் போது சகல வரப்பிரசாதங்களுடனும் அவர் ஓய்வு பெற் சென்றிருந்தார். | ஒழுக்காற்று பரிசோதனைக்கு உட்படும் உத்தியோகத்தர் ஓய்வுபெறும் போது தாபன விதிக் கோவையின் ஆலோசனைகளுக்கும், வாகனங்களை பயன்படுத்தல் தொடர்பான சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கும் இணங்க செயற்பட வேண்டும். | ஓய்வு பெற்றுச் செல்லல் அங்கீகாரத்திற்காக உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அவருக்கான ஒழுக்காற்று பரிசோதனையொன்று காணப்படாதிருந்தமை. |

| | | |
|---|---|---|
| (உ) திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்ட வாகனம் மீளாய்வாண்டின் மார்ச் 15 ஆம் திகதி முதல் நவம்பர் 28 ஆம் திகதி வரையான காலத்தில் அலுவலக வளவில் வந்தமைக்கான உறுதிப்படுத்தல் காணப்படவில்லை. மேலும், அந்த வாகனத்தின் சாரதி அந்த காலத்தில் 04 ஏனைய குழாம் வாகனங்களில் ஓடியிருந்ததுடன் திணைக்களத் தலைவரின் ஆலோசனையின் அடிப்படையில் 06 குழாம் வாகனங்கள் ஆவண உதவியாளர்களினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. | வாகனங்களை பயன்படுத்துதல் பிரமாணங்களுக்கு இணங்க வேண்டியிருந்ததுடன், சரியான உள்ளக கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அந்த இலக்குகளை அடைவதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | “நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030” இற்கு இணங்கும் வகையில் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சட்டம் மற்றும் சுற்றறிக்கையின் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 5. நல்லாளுகை

---

### 5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 சனவரி 28 ஆம் திகதிய DMA/2009(I)(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு ஐயவினாவிற்காக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 6. மனித வள முகாமைத்துவம்

---

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 2,712 மற்றும் 2,496 ஆக இருந்ததுடன், திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ஆளனி சம்பள செலவின தொகுதிகளுக்காக ரூபா 1,022.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரான பதிவாளர் நாயகம் பதவி 2017 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் கடமை மேவுகை செய்தல் மற்றும் பதிற்கடமை அடிப்படையில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. மேலும், சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 41 பதவிகள் 23 வருட காலம் முதல் வெற்றிடமாக காணப்பட்டமையினால் திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பில் தாக்கமளித்திருந்தது. | அத்தியவசிய பதவி வெற்றிடங்களை நிரப்பி திணைக்களத்தின் நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பதிவாளர் சேவையின் II பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக போட்டிப் பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையின் காரணமாக 18 காணி பதிவாளர் அலுவலகங்களில் அந்த பதவி பதிற்கடமை மற்றும் வேலை மேவுகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | ஊழியர்களை சரியான பிரகாரம் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக 14 காணிப் பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் 09 வலய அலுவலகங்களின் ஆவண உதவியாளர்கள் மற்றும் புத்தக கட்டுனர்களும், 26 அலுவலகங்களில் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 110 உத்தியோகத்தர்களும் வெற்றிடமாக காணப்பட்டனர். | சகல அலுவலகங்களுக்கும் சரியான பிரகாரம் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |